(ரூபாய் ஆயிரத்தில்)

வ. எண்.	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	6,68,00	--	
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	22,82,00	-	-
	பெருமொத்தம்	**2,168,41,52**	**579,74,11**	**750,22,43**

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி என்ற முறையில்* Zero Hours*—ல் சில பிரச்சினைகளை நாங்கள் கொண்டு வருகிறபோது நன்றி சொல்வதற்கு மட்டும் நீங்கள் அனுமதித்து, எதிர்க்கட்சியை நசுக்குகின்ற வேலையிலே நீங்கள் ஈடுபடுகின்ற காரணத்தால் உங்களைக் கண்டித்து இந்தச் சபையிலிருந்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.*

(உறுப்பினர்கள் திரு. க. இராஜேந்திரன் மற்றும் திரு. ல. ராதாகிருஷ்ணன் தவிர அ.இ.அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2010-2011, மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 8-11-2010 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2010-2011 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்மீதும் தலா 5 வெட்டுத் தீர்மானங்களுக்கு மிகாமல் இன்று (9-11-2010) பிற்பகல் 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*